# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## அசல் வழக்கு எண்.08/2018

நாள்: 19.06.2024

பெயர்: ராஜேந்திரன் (வா.சா.1) த/பெ: கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ...**

1) என் தந்தை கலியபெருமாளுக்கு யார் யாரெல்லாம் வாரிசுகள் என்றால் 1) என்னுடைய தாயார் பாக்கியம்மாள் 2) நான், 3) அம்சவள்ளி, 4) முருகன், 5) வசந்தா, 6) ராஜமாணிக்கம், 7) அமராவதி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம். எங்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து நாங்கள் பாகம் பிரித்துகொள்ளவில்லை. எங்கள் குடும்பத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் வழக்கில் சொல்லியுள்ள வழக்கு சொத்துக்கள் மட்டும்தான். என் சகோதரிகள் 1) அம்சவள்ளி, 2) வசந்தா, 3) அமராவதி ஆகியோர்கள் திருமணம் செய்து கொண்டு வெளியூரில் வசிக்கிறார்கள். என் குடும்பத்தின் சார்பாக குடும்ப மேனேஜர் என்ற கோதாவில் நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு என் உடன் பிறந்த சகோதர சகோதரிகளிடமும் எந்த ஆவணத்தையும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

2) நான் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியாமல்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்.345/17 அதன் விஸ்தீரணம் 252 சதுர மீட்டர் ஆகும். தாவா சொத்தின் கீழ்மேல், தென்வடல் அளவுகள் தெரியாது. தாவா சொத்தின் நான்கெல்லை என்னவென்றால் கீழ்புறம் ரோடு, தென்புறம் 1ம் பிரதிவாதி சக்திவேலின் நிலம், மேற்புறம் துரைக்கண்ணு நிலம், வடபுறம் கருணாநிதி மனை ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ல் வீட்டு வரி ரசீது மட்டும்தான் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆனது என்னுடைய சகோதரர் ராஜமாணிக்கம் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

3) நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்திற்கு மேற்புறத்தின் வடபுறம் பிரதிவாதிகள் குடும்பத்திற்கு பாத்தியமான வீடு மனையும், அதற்கு நேர் தென்புறம் என்னுடைய அனுபவ அரசுக்கு பாத்தியமான

புறம்போக்கு மனை உள்ளது என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் அரசுக்கு பாத்தியமான எந்த புறம்போக்கு நிலமும் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசுக்கு புறம்போக்கு சொல்கிற நிலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நத்தம் நிலமாகும். நான் இவ்வழக்கிற்காக சம்பந்தமே இல்லாமல் பிரதிவாதிகளின் சொத்தை அரசு புறம்போக்கு நிலம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) தாவா சர்வே எண்.345/17 ல் 252 சதுர மீட்டரில் மேற்புறம் 850 சதுர அடி மனையை பிரதிவாதிகளின் முன்னோர்கள் 16.10.1940 ல் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதற்கு மேற்புறமுள்ள சொத்தை பிரதிவாதிகளின் முன்னோர்கள் 20.10.1937 ல் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. UDR சர்வேயில் தவறுதலாக வழங்கப்பட்ட பட்டா மற்றும் புலவரைபடத்தை வைத்துக்கொண்டு எங்கள் குடும்பத்திற்கு பாத்தியமில்லாத பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்.345/17 ல் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 850 சதுர அடி நிலத்தை தவிர மற்ற இடத்தை நான் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ல் பட்டாவில் என் குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள் இல்லை என்றாலும், என் பெயரில் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். நான் பிரதிவாதியிடம் பிரச்சினை செய்ய வேண்டும் என்ற காரணத்தினால்தான் என் பெயரை மட்டும் போட்டு பட்டா வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. வருவாய்துறையில் வழங்கப்பட்ட தவறான பட்டாவை வைத்துகொண்டு உண்மையை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

ஒப்பம்/ திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.